Registered as a Newspaper

பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 276

செவ்வாய்க்கிழமை 29 ஒகஸ்ட் 2023

ஆவணி 12 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

36 அடி கொள்ளளவான

## இரணைமடுவில் 11 அடிக்கே நீர்

கிளிநொச்சி, ஓக. 29
36 அடி நீர்கொள்ளளவைக் கொண்ட வடமாகாணத்தின் மிகப் பெரிய நீர்ப்பாசனக்குளமாகிய இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 11 அடியாகக் குறைவடைந்துள் »11

குருந்தூர்மலையில் தொல்லியல் திணைக்களம்

# ஆக்கிரமித்த காணிகளை விடுவிப்பதற்கு இணக்கம்

முல்லைத்தீவு, ஒகஸ்ட் 29
குருந்தூர் மலையில் தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நேற்றுக் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. »11

## மாம்பழம் ரூ. 170,000

யாழ்ப்பாணம், ஒக. 29
நாவற்குழி அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோவிலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாம் »11

## விகாரைக்கு அனுமதிகோரி போராட்டம் நடத்திய பிக்குகள்

இம்மியும் இடமளிக்காத கிழக்கு ஆளுநர்

திருகோணமலை, ஒக. 29
நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பிக்குகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், மாவட்ட ஒருங்கிணைப் »11



## துர்க்கை வடிவில் தூக்குக்காவடி

*மனைவிக்காக பக்தரின் நேர்த்தி*

யாழ்ப்பாணம், ஒக. 29
வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை சிறி துர்க்காதேவி ஆலய வருடாந்த பெருவிழாவின் தேர்த் திரு »11

## 8 வயதுச் சிறுவன் மீது துஷ்பிரயோகம்!

15 வயதுச் சிறுவன் கைது

வவுனியா, ஒக. 29
வவுனியாவில் 8 வயதுச் சிறுவனை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 15 வயதுச் சிறு »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ. 120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## யாழ். குடாநாட்டை அச்சுறுத்திய கொள்ளைக்கும்பல் கூண்டோடு கைது

*12 வழக்குகள் அவர்கள் மீது நிலுவை*

யாழ்ப்பாணம், ஒக. 29
யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக அதிகாலை வேளையில் கத்தியை காட்டி நகைகளைக் கொள்ளையடித்த கும்பலை யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு »11



## பல்கலை மாணவன் கத்தியுடன் கைது

யாழ்ப்பாணம், ஒக. 29
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பெரும்பான்மையின மாணவனை கத்தியுடன் அவருடைய தங்குமிடத்திலிருந்து கைது செய்துள் »11

## அங்கப்பிரதட்சணம் செய்தவர் சந்நிதியில் மயங்கி வீழ்ந்து சாவு!

யாழ்ப்பாணம், ஒக. 29
தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் அங்கப்பிரதட்சணம் செய்த ஒருவர் மயங்கி வீழ்ந்து »11

## முந்த முயன்றதால் விபரீதம்: இளம்குடும்பப் பெண் பலி!

முல்லைத்தீவு, ஒக. 29
முச்சக்கரவண்டியை முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்துக் குள்ளானதில் படுகாய »11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வு: நீதி அமைச்சு ரூ. 56 இலட்சம் விடுவிப்பு

*முல்லை மாவட்டச் செயலகத்துக்கு நேற்று அறிவிப்பு*

முல்லைத்தீவு, ஒக. 29
கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுக்கு 56 இலட்சம் ரூபா நிதி நிதி அமைச்சால் விடுவிக்கப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமா மகேஸ்வரன் 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார். 'நிதியமைச்சால் அகழ்வுப் பணிகளை முன் »11

## நல்லூரில் பொலித்தீனை வைத்திருந்த 35 கடைக்காரர்களுக்கு எச்சரிக்கை

பக்தர்களுக்கு துணிப்பையும் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக. 29
நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள கடைகளில் தடைசெய்யப்பட்ட பொலித்தீன் வகைகளை கடைகளில் வைத்திருந்த 35 கடை உரிமையாளர்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையால் கடும் எச்சரிக்கை »11



## யாழ்ப்பாணத்தில் மட்டும்
# 22,044 குடும்பங்கள் வறட்சியால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

**யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்ணளவாக 22 ஆயிரத்து 44 குடும்பங்களைச் சேர்ந்த 71 ஆயிரம் பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இவற்றில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மருதங்கேணி, சங்கானை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவுகளில் குடிதண்ணீர் பற்றாக்குறையான பகுதிகளுக்கு தேசிய இடர் முகாமைத்துவ சேவைகள் நிலையத்தின் நிதி உதவியுடன் பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில் குடிதண்ணீர்த் தேவையுடைய குடும்பங்களின் தொகை அதிகரிக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் பிரதேச செயலர்களாலும் இது தொடர்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு, நெடுந்தீவு உட்பட தங்களால் நீர்வழங்கல் செய்யப்படும் பிரதேசங்களுக்கு குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை சமாளிக்கக்கூடிய வகையில் நீர்வழங்கலை மேற்கொள்ள முடியுமெனவும் தற்போது மாவட்டத்தில் அவ்வாறான சேவைகள் 18 குடிதண்ணீர் மூலங்கள் ஊடாக செயற்படுகின்றன என்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் தெரிவித்தனர். (ம-27)

## மழைக்கு வாய்ப்பு

நாட்டில் அடுத்த சில நாள்களில் தென்மேற்குப் பகுதியில் மழையுடனான வானிலை ஓரளவுக்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யும். ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாகப் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம)

### கடும் வறட்சி எதிரொலி
## தென்மராட்சிக் கிராமங்களுக்கு இன்று தொடக்கம் குடிதண்ணீர்

சாவகச்சேரி, ஓக. 29

கடும் வறட்சி காரணமாக தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள பல கிராமங்களுக்கு இன்றுமுதல் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதற்கட்டமாக தென்மராட்சி தெற்குப் பகுதியிலுள்ள ஒன்பது கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதி இடர் முகாமைத்துவ திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேசசபை மற்றும் நீர்வழங்கல் அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் வாகனங்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது. தனங்களப்பு, மறவன்புலவு, கோவிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி, நாவற்குழி கிழக்கு, நாவற்குழி மேற்கு, தாவளை, இயற்றாலை, சரசாலை தெற்கு, சரசாலை வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கே முதற்கட்டமாக குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-9)

## பெருந்தோட்டப் பயிர்கள் வறட்சியால் கடும்பாதிப்பு

கொழும்பு, ஓக. 29

வறட்சியான காலநிலை காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களும் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் இறப்பர் தோட்டங்களில் இருந்து பெறப்படும் பாலின் அளவு குறைந்துள்ளதுடன் இதனால் தமது வருமானம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - தேயிலை தோட்டங்களும் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக தேயிலை தோட்டங்களில் விளைச்சல் வீழ்ச்சியடைந்துள்ளதாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-ரி2)

## நீர்த்தேக்கப் பராமரிப்பும் தனியார் மயமாகின்றது!

கொழும்பு, ஓக. 29

கொழும்பிலுள்ள பேரவாவியை துர்நாற்றம் இல்லாது நீரை சுத்திகரித்து பராமரிக்கும் பணிகளை தனியாரிடம் ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி இந்தப் பணியை சிங்கப்பூர் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கும் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பேரவாவியை சீர்செய்வதற்காக அந்த நிறுவனம் உயர் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் அறிவியல் முறைகளைப் பயன்படுத்தவுள்ளது. இந்தச் செயற்பாடுகளை மேற்பார்வையிட இலங்கை நில அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், இலங்கை துறைமுக அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இலங்கை காலநிலை நிதி நிறுவனம் மற்றும் கொழும்பு மாநகரசபை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## விவசாயக் கிராமமாக அச்செழு அடையாளம்
### பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக.29

அச்செழு கிராமம் யாழ். மாவட்ட விவசாயப் பிரிவால் மாதிரி விவசாயக் கிராமமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு விவசாயம் சார்ந்த பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜே/127 கிராம அலுவலர் பிரிவில் பப்பாசிக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பயன்தரு மரங்களின் கிளைகள் வெட்டப்பட்டு அவை அடுத்த பருவத்துக்கு பழம் தரும் மரங்களாக மாற்றப்படுகின்றன. தூவல் நீர்ப்பாசனம், தூறல் நீர்ப்பாசனம், பழரசத் தயாரிப்பு போன்றவற்றுக்கான உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

கிணறுகள் புனரமைக்கப்படுவதுடன், தேனீ வளர்ப்புப் பயிற்சி, அதற்கான உபகரணம் வழங்கல் போன்ற திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.

இந்தத் திட்டங்கள் 10.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (ள-125)



## வர்த்தகக் கல்வியில் வவுனியா பின்னடைவு
### காரணத்தை ஆராயுமாறு கல்வியியலாளர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 29

உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் வவுனியா மாவட்டம் 25ஆவது மாவட்டமாக தொடர்ந்து பதிவாகி வருகின்றது. இதற்கான காரணத்தை ஆராயுமாறு கல்வியியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

2018ஆம் ஆண்டுக்கு முன் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வர்த்தகப் பிரிவில் முன்னிலையில் காணப்பட்ட வவுனியா மாவட்டம் கடந்த சில ஆண்டுகளாக பின்னோக்கிச் செல்கின்றது. இந்த நிலையிலேயே இது தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிட்டடியில திருநெல்வேலி, பலாலி றோட்டில ஒரு நாற்சந்தி. திடீரெண்டு வேகமாப் போன காரொண்டு, முன்னால வந்த மோட்டர் சைக்கிளோட மோதுப்பட, பைக்கில வந்த ஆள் அப்பிடியே அடிபட்டு கீழ விழுந்திட்டார். பைக்குக்கும் சேதம்,ஆளுக்கும் சேதம். காரில வந்தவை ரத்தக் காயத்தோட கிடக்கிறவரை போய் பாக்கவுமில்லை, அவரைக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில சேர்க்கவுமில்லை. காயப்பட்டு எழும்பேலாமல் கிடந்தவரை அப்பிடியே விட்டிட்டு, இந்த அக்சிடெண்டுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமுமில்லாத மாதிரி எந்த வேகத்தில வந்திச்சோ அந்த வேகத்தோட கார் அங்க நிக்காமல் பறந்து போட்டுது. இத்தனைக்கும் கார்க்காரரில தான் பிழையாம். சிலவேளை நிண்டால் காசு ஏதும் குடுக்க வேண்டி வந்திடும் எண்டு நினைச்சோ என்னவோ அவை போட்டினம் போல.

பிறகு அங்க நிண்ட சனங்கள் தான் காயம்பட்டவரை தூக்கி, ஆஸ்பத்திரிக்கும் அனுப்பிவைச்சவை. இது பொலிஸ் கேஸ் ஆகினதால, அக்சிடெண்ட் நடந்த இடத்துக்குக் கிட்ட இருந்த சி.சி.ரீ.வி . கமெரா எல்லாம் பொலிஸ் செக் பண்ணிப் பார்த்திருக்கு. ஒருமாதிரி அதைவைச்சு காரின்ர நம்பரை எடுத்திட்டு, அதை வைச்சு ஆரின்ர கார் எண்டதையும் கண்டுபிடிச்சிட்டினம். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில வேலை செய்யிற ஒரு பொம்பிளை டொக்டரின்ர கார் தானாம் அது. உடனேயே பொலிஸ் அவாவிட்டப் போய் விசாரிச்சிருக்கு. தான் தான் பைக்கை இடிச்சிட்டுப் போனதெண்டு அந்த டொக்டர் ஒத்துக்கொள்ள, உடனேயே கோர்ட்ஸுக்கு அனுப்பி இப்ப அவாவை பிணையில விட்டிருக்காம்.

வருத்தமெண்டு ஆர் வந்தாலும், எந்த நேரமெண்டாலும் அவைக்கு மருத்துவம் பார்த்து, உயிரைக் காப்பாத்துறதுதானே டொக்டரின்ர முதல்வேலை. அப்பிடிப்பட்ட ஒரு டொக்டர் காரைக் கொண்டு போய் மோட்டர் சைக்கிளோட மோதிப்போட்டு, காயத்தோட ஒருத்தன் துடிச்சுக் கொண்டிருக்க , அப்பிடியே விட்டிட்டு போயிருக்கிறா எண்டா, அவா தன்ர தொழிலுக்கே துரோகம் செய்திட்டா எண்டுதான் அர்த்தம். சாதாரண ஒராள் இப்பிடி இடிச்சாக் கூட, நிண்டு, என்ன ஏதெண்டு விசாரிச்சு, காயப்பட்டவையை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிப் போட்டுத்தான் போவினம். அப்பிடியிருக்கேக்க இந்த டொக்டர் என்ன செய்திருக்க வேணும்? காரை நிப்பாட்டிப் போட்டு, அடிபட்டவருக்கு காயம் எப்பிடி எண்டு பாத்து, முதலுதவியாவது செய்திருக்க வேணும். சிலவேளை ஆள் செத்திருந்தால் கூட இப்பிடித்தானே பறந்தடிச்சு ஓடியிருப்பா. தங்களால பாதிக்கப்பட்டவைக்கு முதலுதவி கூட செய்யமுடியாமல், ஒரு சராசரி மனிசனுக்கு இருக்கவேண்டிய மனிதாபிமானம் கூட இல்லாமல், ஓடியொளிச்சவையிட்ட எப்பிடி ஆஸ்பத்திரியில நல்ல 'ட்ரீட்மெண்ட் ' செய்வினம் எண்டு நம்பிப் போகமுடியும்? ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விசம். ஆயிரம் நல்ல டொக்டர்மார் இருக்கிற நேரத்தில, இப்பிடி ஒண்டிரண்டு பேரால எல்லா டொக்டர்மாருக்கும் தானே கெட்ட பேர்.



- பட்சி

## இன்று தேர்

### ஆனைக்கோட்டை சம்பந்தப் பிள்ளையார்

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை சிறி வரதவிக்ன விநாயகர் (சம்பந்தப் பிள்ளையார்) ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று காலை இடம் பெறவுள்ளது. (ம)

### ஊர்காவற்றுறை மனோன்மணி அம்பாள்

யாழ்ப்பாணம், ஓக. 29

ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதி தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தேர் உற்சவம் இன்று காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ம-ரி2)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 29

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு தொடர் 15 செப்ரெம்பர் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை - பன்னாலை திருவருள்மிகு சிவ பூதராயர் ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சேக்கிழார்பெருமான் குரு பூஜையை தொடர்ந்து 'முதல் மீனைச் சிவனுக்கு என்று கடலில் விட்ட நாயனார்' என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவை இளம் சைவப்புலவர் நித்திய பாபுதரன் ஆற்றவுள்ளார். (ம-ரி2)

நல்லைக்கந்தனுக்கு
இன்று (29.08.2023) செவ்வாய்க்கிழமை
ஒன்பதாம் திருவிழா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
YARL SMART (Pvt) Ltd
076 666 5267 / 021 430 0044
No.341, K.K.S. Road, Jaffna.



### நல்லூரான் சிறப்பம்சம்

### சிந்தை நிறை கந்தனே

ஆலோலம் பாடும் வள்ளி
அகத்தினை வென்றவா
அழகு நல்லைக் கோவிலிலே
அலங்காரம் தந்தவா
கோலாகலம் காணக்
கொடியற்றம் கண்டவா
குடியிருக்கும் கோவிலிலே கோணாகி நின்றவா
வேல் கொண்டு வினை தீர்க்க
வீதி வலம் வந்தவா
விருப்புடனே வேல் விழியாரிருவருடன் இணைந்தவா
சீலமுயர் வாழ்வு பெறவென சிந்தையில் நிறைந்தவா
சிங்காரம் காட்டி ஏனோ சிரிக்கின்றாய் நல்லூரா!

தேவி.கணேஸ்,
ஆனைப்பந்தி

# கச்சதீவு கைமாற்றப்பட்டால் இந்தியப் பிடியில் வடகடல்

## ஈழமீனவர்கள் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஓக. 29**

**கச்சதீவு இந்தியாவிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டால், இலங்கையின் வடகடல் இந்தியாவின் பிடிக்குள் இரையாகும் என்று ஈழ மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதி மகேஷ் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடியால் வட பகுதி மீனவர்கள் தினமும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடித் தொழிலை நிறுத்துமாறு பலசுற்றுப் பேச்சில் ஈடுபட்டுவிட்டோம். எனினும் எந்தப் பயனும் இல்லை. இவ்வாறிருக்கையில் கச்சதீவு மீட்கப்படவேண்டும் என்று தமிழகத் தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். தமிழக முதலமைச்சர் மற்றும் ஆளும் பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் ஆகியோரும் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கச்சதீவு இலங்கையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்போதே இந்திய மீனவர்களின் அத்துமீறல் கட்டுக்குள் அடங்காமல் உள்ளதென்றால், கச்சதீவு இலங்கையால் இந்தியாவுக்குக் கைமாற்றப்பட்டால் நிலைமை மேலும் பாரதூரமாகும். வடகடல் தமிழக மீனவர்களால் ஆக்கிரமிக்கப்படும் - என்றார். (ம-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடிமனைக்குள் மதுநிலையங்கள் வேறிடத்துக்கு உடனே மாற்றுக

வடக்கு ஆளுநருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்

**கிளிநொச்சி, ஓக.29**

**கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் செறிவும் நடமாட்டமும் அதிகமுள்ள பகுதிகளில் இயங்கிவரும் 3 மதுபான விற்பனை நிலையங்கள் பொருத்தமான வேறிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி கோரிக்கை விடுத்துள்ளார்.**

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி - கரைச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மூன்று இடங்களிலும் புதிதாக 3 மதுபான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அக்கராயன் மேற்கு கிராமத்தில் இம்மாஸ்நகர் பகுதியிலும், வட்டக்கச்சி கிராமத்தின் ஆறுமுக வீதியும் சில்வா வீதியும் இணையும் பிரதான வீதியிலும் விசுவமடு சந்தியில் என மக்கள் குடியிருப்பு நிறைந்த பகுதிகளிலும் பாடசாலைகள், மதத் தலங்கள் என்பவற்றுக்கு அருகிலும் இவை காணப்படுகின்றன.

மக்களது இயல்பு வாழ்வுக்கு பொருத்தமற்ற வகையில் இவை அமைக்கப்பட்டதால் பிரதேச மக்கள் தேவையற்ற இடர்பாடுகளை எதிர்நோக்கும் சூழல் ஏற்பட்டுள்ளதாக சமூகமட்ட அமைப்புகளாலும் தொடர் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டபோதும் குறித்த மதுபான நிலையங்களை இடம் மாற்றம் செய்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் அதற்குரிய நடவடிக்கைகள் எவையும் நடக்கவில்லை. எனவே இந்த விடயம் தொடர்பில் கரிசனையைக் கொண்டு மேற்குறித்த மதுபான விற்பனை நிலையங்களை மக்கள் பாதிப்புறாத வகையில் பொருத்தமான இடங்களுக்கு உடனடியாக மாற்றம் செய்ய ஆவன செய்ய வேண்டும் - என்றுள்ளது. கடிதத்தின் பிரதிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலர், கரைச்சி பிரதேச செயலகம், சமூக மட்ட அமைப்புகள் ஆகியவற்றுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ச-13)




## யாழ்.பல்கலையின்

# சமூக உணவு செயற்றிட்டம் சுவிஸ் நிறுவகம் நிதியுதவி!

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப் பட்டுவரும் சமுதாய நலன் உணவு செயற்றிட்டத்துக்கு சுவிற்சர்லாந்திலிருக்கும் அனைத்துலக தமிழ்க்கலை நிறுவகம் ஒரு மில்லியன் ரூபா நிதியை நன்கொடையாக வழங்கியுள்ளது.



யாழ். பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்திருந்த அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் தேர்வுப் பொறுப்பாளர் நா.விஜயகுமார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜாவிடம் நிதிக்கான காசோலையை கடந்தவாரம் கையளித்திருந்தார். (ச-இ)



## சிறுவர் பாதுகாப்பு வாரத்தில் கொக்கிளாயில் நடைபவனி

முல்லைத்தீவு, ஓக.29

மதுரம் அபிவிருத்தி நிலைய அமைப்பால் சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு முல்லைத்தீவு - கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் அண்மையில் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. 'சிறுவர் வன்முறையை இல்லாதொழிப்போம்' எனும் தொனிப்பொருளில் சிறுவர் வன்முறைகளுக்கு எதிராக இந்த நடைபவனி இடம்பெற்றது.

நடைபவனியில் மதுரம் அபிவிருத்தி நிலையம் அமைப்பின் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், சிறார்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (சு-246)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** சிலருக்கு பிள்ளைகள் மூலமும் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. தந்தையின் உடல் நலனில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவு உண்டு.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்கவேண்டாம். தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும்.

**மகரம்:** சிலருக்குசிறிய அளவில்ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். உறவினர்களுடன் பேசும்போது வீண் மன வருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மீனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைகழுவல்கள் பலவிதம்!

'இந்தியாவுக்குப் பாலம் அமைப்பதற்கு முன்னர், அது தொடர்பில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஏனெனில் இலங்கை ஒரு சுதந்திர நாடு. ஆனால், இந்திய அழுத்தங்களால் நாங்கள் சில விடயங்களை நிறைவேற்றுவதற்காக கடந்த காலங்களில் நிர்ப்பந்திக்கப்பட்டோம்' என்றவாறாகக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார் கத்தோலிக்கத் திருச்சபையின் இலங்கைக்கான தலைவரும் கர்தினாலுமான பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, கத்தோலிக்கர்களுக்கான தலைவர் என்பதற்கப்பால், 'சிங்கள கத்தோலிக்கர்களுக்கான தலைவர்' போன்றுதான் கடந்த காலங்களில் செயற்பட்டிருக்கின்றார். அவரின் பல செயற்பாடுகள் இத்தகைய 'சிங்கள' மானோநிலையில் இருந்துதான் அணுகப்பட்டிருக்கின்றன. கர்தினாலின் செயற்பாடுகள் விரல்விட்டு எண்ண முடியாத அளவுக்கு இதை மெய்ப்பித்திருக்கின்றன. இந்த மனோநிலையின் தொடர்ச்சிதான் இந்தியாவுக்கான தரைவழித் தொடர்பு குறித்து கர்தினால் இப்போது வெளிப்படுத்தியிருக்கும் கருத்துகள்.

இலங்கைக்கு சில வலியுறுத்தல்களை – அழுத்தங்களை, வரலாற்றில் பிராந்திய வல்லரசான இந்தியா முன்வைத்தே வந்திருக்கின்றது. கர்தினாலின் கருத்து இவ்விடத்தில் மறுவிவாதம் இன்றிய விடயம். ஆனால், இந்தியா வலியுறுத்திய விடயங்கள் 'தமிழர் நலன்' சார்ந்ததாகவே அமைந்திருக்கின்றன. இப்போதும்கூட 13 ஆம் திருத்தம் பூதாகரமாகப் பேசுபொருள் ஆகிய விடயத்தில், திரைமறைவில் இந்தியாவின் ஆதிக்கமும் வகிபங்கும் கனதியானது என்பது 'மலைமீது ஏற்றிவைத்த தீபம்' போன்று பட்டவர்த்தனமானது. இவ்வாறிருக்கையில் கர்தினால் தெரிவித்திருக்கும் கருத்துகள் ஆரோக்கியமானவையல்ல. உண்மையில் இவை எரிகின்ற நெருப்பில் 'பரல் பரலாக எண்ணெய் ஊற்றும்' கைங்கரியம் தான். இதைத் தமிழர்கள் உணராமலும் இல்லை. அவர் தொடர்பில் தெரியாமலுமில்லை.


உயிர்த்தஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்கள் இருநூறுக்கும் மேற்பட்ட அப்பாவிகளின் உயிர்களைப் பறித்தமைக்கு எதிராக, கர்தினால் வெளிப்படுத்திய கோபாவேசம் அத்தனை நேர்த்தியாகவும் கனதியாகவும் அமைந்தது. விடயத்தை நியாயத்தின்பாற்பட்டு அவர் அணுகினார். கொல்லப்பட்டவர்களுக்கு இலங்கையில் நீதி கிட்டாது என்ற நிலையில், நியாயம் தேடி அவர் வத்திக்கான் வரை பயணப்பட்டார். உயிர்த்தஞாயிறு தாக்குதல்களுக்காக இலங்கைக்கு வெளியில் சர்வதேச நீதியையேனும் பெற்றுவிட வேண்டும் என்பதில் அவர் குறையாத தாகம் கொண்டவராக இன்றளவும் உள்ளார். போர்க்காலத்தின்போது தமிழர் தாயகத்தில் எத்தனையோ கத்தோலிக்கர்கள், கிறிஸ்தவர்கள், கத்தோலிக்க மதகுருமார் கொல்லப்பட்டனர். அரச படைகளால் கத்தோலிக்கத் தேவாலயங்கள் மீதுகூட கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. நவாலி சென்.பீற்றர்ஸ் படுகொலைகள் இதற்கு ஆகச் சிறந்த உதாரணம். ஆனால், இந்தப் படுகொலைகளுக்கு எதிரான கர்தினாலின் நீதி இன்னமும் மௌனித்தே இருக்கின்றது.

கர்தினால் சிங்களக் கத்தோலிக்க மனோநிலையில் இருந்துதான் விடயங்களை அணுகுகின்றார் என்ற கருத்துப் பதிவாவது இதுவொன்றும் முதல்முறையல்ல. ஆனால், உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள், அதன் பின்னணி, இவற்றின் பின்னால் மறைந்துள்ள இனவாதப் பூதம் என்பவற்றை உய்த்துணர்ந்து இனியாவது அவர் அனைத்து மக்களுக்குமான – குறைந்தபட்சம் அனைத்துக் கத்தோலிக்கர்களுக்குமான தலைவராகச் செயலாற்றுவார் என்ற எதிர்பார்ப்பு இருக்கவே செய்தது. இருப்பினும், இந்தியாவுடனான தரைத்தொடர்பு குறித்து இப்போது கர்தினால் சொல்லியிருக்கும் கருத்துகள் அவரின் மாறாத மனோநிலையையே கட்டியம் செய்கின்றன. யூதேயாவின் ஐந்தாம் பேரரசனான பிலாத்து, மதகுருக்களின் உச்சக்கட்ட அழுத்தத்தால் சமூக விரோதியான பரபாஸை விடுவித்து, இயேசுவுக்கு சிலுவைச்சாவு என்று தீர்ப்பிட்டபோது அரியணையில் நின்றபடி 'இந்தப் பாவம் என்னைச் சேராது' என்று சொல்லி, தன் கைகளைக் கழுவினானாம். கர்தினாலும் எம்மைக் கைகழுவிக் கனகாலம். ஆனால் இரண்டும் வேறுபட்ட கைகழுவல்கள்.

### நாளொரு நல்வார்த்தை

"எல்லாவற்றையும்விட மிகவும் சக்தி வாய்ந்த விடயம் அன்பு என்பதை நிச்சயமாக நான் அறிந்துள்ளேன்"

– ஜே. கே. ரௌலிங்




# சஜித், ரணில் சங்கமம்; முயற்சி திரைமறைவில்

கொழும்பு, ஓக. 29

**ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் இணைப்பதற்கான நகர்வுகள் அரசியல் களத்தில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சகாவாகக் கருதப்படுகின்ற முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஊடாகவே ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன எனத் தெரியவருகின்றது.

இந்த முயற்சியின் ஓர் அங்கமாகவே 'மீண்டும் தாய்வீடு திரும்புங்கள்' என சஜித் அணிக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரான ரவி கருணாநாயக்க ஓரிரு நாள்களுக்கு முன்னர் அழைப்பு விடுத்துள்ளார். சஜித் அணியில் உள்ள தலதா அத்துகோரல, கபீர் ஹாசீம், ரோகினி கவிரத்ன உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரு அணிகளும் இணைவதற்கு தமது ஆதரவை ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ள நிலையில், இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த சம்மேளனம் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இதன்போதும் இணைவுக்கான பகிரங்க அழைப்பு விடுக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

(எ-44)

## ஆளுங்கட்சி எம்.பி.க்கள் வெளிநாடு பறக்கத் தடை

செப்ரெம்பர் முதல்வார நாடாளுமன்ற கூட்டத் தொடரின்போது ஆளுங்கட்சியினர் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

வெளிநாடுகளில் தங்கி இருப்பவர்கள் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிக்குள் நாடு திரும்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி பிரதமர் கொறடா அலுவலகம் ஊடாக இதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை செப்ரெம்பர் 5 முதல் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. செப்ரெம்பர் 7 அல்லது 8 ஆம் திகதிகளில் வாக்கெடுப்பு நடத்தப்படும். அந்தப் பிரேரணையை தோற்கடிப்பதற்கும், ஆளுங்கட்சி ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்கும் ஆளுங்கட்சியினர் கட்டாயம் சபையில் இருக்க வேண்டும் என பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-44)

## தேர்தலின்போது அரசு கவிழும்!

யாழ்ப்பாணம், ஓக. 29

தற்போதுள்ள அரசாங்கத்தால் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு ஓராண்டு கழிந்துள்ளது. நாட்டு வளங்களை விற்கின்ற மக்களைத் துன்பத்துக்கு உள்ளாக்குகின்ற ஜனாதிபதியாகவே அவர் இருக்கின்றார்.

இந்த அரசாங்கம் நாட்டின் வளங்களை ஏனைய நாடுகளுக்கு விற்பனை செய்கின்றது. அந்நிய நாடான இந்தியா எமது வளங்களைச் சுரண்டுகின்றது. மக்கள் ஆணையில்லாத ஒரு ஜனாதிபதி எவ்வாறு நாட்டு வளங்களை விற்பனை செய்யமுடியும்?. இதற்கெல்லாம் தேர்தலின்போது மக்கள் பதில் வழங்குவார்கள் - என்றார்.

(எ-27)

**நாளை**

**30.08.2023**

புதன்கிழமை

ஆவணி 13

| | |
|---|---|
| சுபநேரம் | : 04.35 – 06.05 |
| ராகுகாலம் | : 12.05 – 01.35 |

பூரணை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு எதிராக யாழில் நேற்றுப் போர்!

யாழ்ப்பாணம், ஓக.29

**ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஓய்வூதிய நிதியம் என்பவை தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**




அமைச்சரவையில் கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றின் நிதிகளை உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்குப் பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தால் சுமார் 25 இலட்சம் உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரேயொரு நிதி மூலமான ஓய்வூதியச் சேமிப்பை அவர்களின் அனுமதியின்றி பயன்படுத்த அரசாங்கம் முயல்கின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் கணக்குகளின் மீது சுமத்தப்படும் போது அனைத்து ஊழியர்களினதும் ஊழியர் சேமலாப நிதிய, ஊழியர் நம்பிக்கை நிதிய சேமிப்புக்களில் இருந்து 50 வீதமான தொகை எதிர்வரும் 16 வருட காலப்பகுதியில் இல்லாது போகும் அபாயம் உள்ளது. ஓய்வூதிய நிதியையும் இவ்வாறு அரசாங்கம் கையாள முனைகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

'ரணில் ஆட்சியே உழைக்கும் மக்களின் நிதியை கொள்ளையடிக்காதே', 'ரணில் - ராஜபக்ச ஆட்சியே மக்களை வாட்டி வதைக்காதே', 'அங்கத்தவர்களின் அனுமதியின்றி நிதிகளை சட்டவிரோதமாகப் பயன்படுத்தாதே', 'உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்குப் பயன்படுத்தும் அமைச்சரவை தீர்மானத்தை மீளப்பெறு' போன்ற வாசகங்களுடன் கூடிய பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ். பல்கலைக்கழகம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தபால் தொலைதொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாண அரச சாரதிகள் சங்கம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (எ-125)

## நோயாளியை பொறுப்பேற்க கோரிக்கை!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளி ஒருவரைப் பொறுப்பேற்குமாறு அவருடைய உறவினர்களுக்கு மருத்துவமனை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

65 வயது மதிக்கத்தக்க இந்த முதியவர், சுயநினைவு இழந்த நிலையில் கடந்த 24 ஆம் திகதி இரவு யாழ். போதனா மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். எனினும் இதுவரை அந்த முதியவரின் உறவினர்கள் எவரும் அவரைப் பொறுப்பேற்காத நிலையில், உறவினர்களை மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-ரி2)

# யாழ்ப்பாணத்திலும் மின்னியல் டக்ஸி!

## டேவிட் பீரிஸ் நிறுவனம் முன்மாதிரிகை




இலங்கையின் முன்னணி வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் தனது முன்மாதிரித் திட்டமான ஈட்ரைவ் மின்னியல் ஓட்டோ டக்ஸி சேவையை யாழ்ப்பாணத்துக்கும் விஸ்தரிப்பதாக அறிவித்துள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சூழலுக்கு நட்பான மற்றும் செலவுச் சிக்கனமான போக்குவரத்துத் தீர்வை வழங்கும் ஈட்ரைவ் திட்டம் யாழ்ப்பாண நகரத்துக்கும் தற்பொழுது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மின்னியல் வாகனங்களே போக்குவரத்தின் எதிர்காலமாகியுள்ளது. இது புகை வெளியேற்றம் அல்லாத மற்றும் நிலத்தடி எரிபொருள்களில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு உதவும் வகையில் சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்காததாக அமைந்துள்ளது. மின்னியல் டக்ஸி அறிமுகமானது காா்பன் வெளியேற்றத்தைக் குறைப்பது மாத்திரமன்றி, எரிபொருளுக்கான செலவினங்களைக் குறைப்பதன் ஊடாக அந்நியச் செலாவணியைச் சேமிக்க உதவுகிறது. மின்னியல் வாகனங்களின் செயற்றிறன் பயணிகளுக்கு நேரடியான நன்மையை வழங்கி குறைந்த விலையில் பயணத்துக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது.



ஈட்ரைவ் திட்டமானது பயணிகளுக்கு செலவுச் சிக்கனமான போக்குவரத்து சாதனத்தை வழங்குவது மாத்திரமன்றி, இரைச்சல் குறைவான, சுமுகமான பயணத்தின் ஊடாகப் பாதுகாப்பான மற்றும் சிறந்த அனுபவத்தைப் பயணிகளுக்கு வழங்குவது என்ற உண்மையான நோக்கத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

நாட்டில் ஒழுக்கமான, தொழில்முறை டக்ஸி சாரதிகள் அணியை உருவாக்கும் நோக்கத்துடன், டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி ஈட்ரைவ் டக்ஸி சேவையின் சாரதிகளுக்கு மீண்டும் பயிற்சியை உறுதிசெய்துள்ளது. இந்த வாகனத்தை எப்படிச் செலுத்துகின்றனர் என்பது மட்டுமல்லாது, வீதிகள் மற்றும் வீதி நடைமுறைகள் குறித்த புத்தாக்கப் பயிற்சியையும் பெற்றுள்ளனர். கம்பனியால் மத்தியிலிருந்து மேற்கொள்ளப்படும் கண்காணிப்பானது பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது. ஏதாவது நிகழ்வுகள் அல்லது சாரதிகள் தொடர்பான கருத்துகளை வழங்குவதற்காக சீருடையணிந்த ஈட்ரைவ் சாரதிகளின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அவர்கள் பற்றிய விபரங்கள் வாடிக்கையாளர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட முச்சக்கர வண்டிகளைப் பதிவுசெய்த முதலாவது நிறுவனம் என்பதையிட்டுப் பெருமையடைவதாக டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் பணிப்பாளரும், பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான நாலக மடுகல்ல தெரிவித்துள்ளார். அவர் குறிப்பிடுகையில்: 'சூழலுக்கு நட்பான, செலவுச் சிக்கனமான போக்குவரத்து வாய்ப்புகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு அப்பால் எமது குறிக்கோள் நீடித்துச் செல்கிறது. தொழில்முறை ரீதியாகப் பயிற்சியளிக்கப்பட்ட சாரதிகளின் ஊடாக பயணிகளுக்குப் பாதுகாப்பான முச்சக்கர வண்டி சேவையை வழங்குவதில் புதிய எல்லையை உருவாக்கவுள்ளோம்' -என்றார்.

முதற்கட்டமாக ஈட்ரைவ் மின்னியல் முச்சக்கர வண்டிகள் யாழ்ப்பாண நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் செயற்படுத்தப்படவுள்ளன. யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் உள்ள டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் அலுவலகம் மற்றும் பலாலி வீதியில் உள்ள டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் பிராந்திய அலுவலகத்திலிருந்து இந்தச் சேவையை இலகுவாக அணுகமுடியும். வெள்ளை மற்றும் பச்சை நிறம் கலந்த தனித்துவமான வர்ணங்களால் இந்த முச்சக்கரவண்டிகளை இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்பதுடன், திங்கள் முதல் சனிக்கிழமை ஆகிய நாள்களில் காலை 7 மணி முதல் மாலை 7 மணிவரை இதன் சேவையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பயணிகள் வீதியில் செல்லும் ஈட்ரைவ் மின்னியல் டக்ஸியை இலகுவில் நிறுத்திக் கொள்ள முடியும் அல்லது 077 806 8060 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி இச்சேவையைப் பெற்றுக்கொள்ளமுடியும். இந்த முச்சக்கரவண்டிகள் ஒரு கிலோமீற்றருக்கு 90 ரூபா என்ற நேரடியான கட்டணத்தைக் கொண்டிருப்பதுடன், நெரிசல் நிறைந்த நேரத்துக்கான கட்டணம் போன்ற எந்த விதமான பிற கட்டணமும் வசூலிக்கப்படாது. அனைத்து வாடிக்கையாளர்களின் சௌகரியத்தையும் கருத்திற்கொண்டு பணம் அல்லது கடன் அட்டை/பற்றுமதி அட்டை மூலம் எளிதாகப் பணம் செலுத்தக்கூடிய புத்தாக்கமான அம்சமும் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் ஆரம்பமாகும் அறநெறிப் பாடசாலை

சாவகச்சேரி, ஓக. 29

சாவகச்சேரி - சங்கத்தானை இத்தியடி பிள்ளையார் கோவில் அறநெறிப் பாடசாலை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கொரோனாக் காலத்தில் மாணவர்கள் வரவின்மை காரணமாக மூடப்பட்ட பாடசாலை கோவில் பரிபாலன சபையின் முயற்சியின் பயனாக மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. பிரதி வெள்ளிக்கிழமை மாலை அறநெறி வகுப்புகள் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ம-ரி3-9)



## இலங்கை கிறிஸ்தவ மன்றத்தின் ஆயராக பேராயர் பத்மதயாளன்!

யாழ்ப்பாணம், ஓக. 29

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் பேராயர் வே.பத்மதயாளன் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் தலைவராக மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பொரளையில் அமைந்துள்ள இலங்கைத் திருச்சபையின் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் காலை 8.30 மணிக்கு ஆரம்பமானது. முன்னாள் தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனப் பேராயர் செ.தியாகராஜா ஓய்வுபெற்றமையால் அவரின் தலைமைப் பதவியின் மிகுதிப் பகுதியை புதிய பேராயர் பொறுப்பேற்றார்.

ஆகவே இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்ற செயற்குழுவின் பரிந்துரைக்கமைய மீண்டும் ஒரு வருடத்துக்கு பேரருட் கலாநிதி வேலுப்பிள்ளை பத்மதயாளன் அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-125)

## இலங்கை - இந்தியா

# தரைவழி இணைப்புக்கு முன்னர் பொதுவாக்கெடுப்புத் தேவை

### கர்தினால் மல்கம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 29

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலத்தைக் கட்டுவதற்கு முன்னர் அதுகுறித்து சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரலாறு முழுவதும் ஆட்சியாளர்களே அந்நியர்களுக்காக நாட்டுக்குத் துரோகமிழைத்துள்ளனர். அவர்கள் எங்கள் நாட்டின் பகுதிகளை பல நாடுகளுக்கும் வெளிநாட்டுச் சக்திகளுக்கும் விற்பனை செய்கின்றனர். நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தக் கூடிய பல முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கின்றனர்.

இப்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் கட்டப் போவதாகச் சொல்கின்றனர்.

இந்தியாவின் கருத்துக்கு அமைய கடந்த காலங்களில் நாங்கள் சில விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டோம். அவை அனைத்தும் முட்டாள்தனமானவையே.

இலங்கை ஒரு சுதந்திர நாடு. இந்த நாடு வேறு எந்த நாட்டுக்கும் அடிமையில்லை.

நாட்டின் மன்னர்கள் இந்தியாவுடன் பல பொருளாதார விடயங்களைக் கையாண்டுள்ளனர். ஆனால், அவர்கள் அடிமையாகவில்லை.

ஆதலால், இலங்கையின் நிலைமை தொடர்பில் நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன் - என்றார். (ம)

## குளவிக்கூடுகள் தொடர்பில் அவதானமாகச் செயற்படுக

### சாவகச்சேரி சுகாதாரப் பணிமனை

கொடிகாமம், ஓக. 29

தென்மராட்சியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழப்புகள் ஏற்படும் நிலையில், வீட்டுக்கு அருகில் குளவிக் கூடுகள் இருப்பின் அவற்றை அகற்றுவது தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பணிமனை அறிவுறுத்தியுள்ளது.

குளவிக் கூடுகளை அகற்ற முடியாத சந்தர்ப்பங்களில் மேலதிக உதவிகள் தேவைப்படின் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் இடர்முகாமைத்துவப் பிரிவின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பனையோலைகள் காணிகளிலோ, வீதிகளிலோ காணப்பட்டால் அவற்றை அகற்றும்போது மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-159)

## காலி சிறைக்கைதிகளை பார்க்க அனுமதி

கொழும்பு, ஓக. 29

காலி சிறைச்சாலையிலுள்ள கைதிகளைப் பார்வையிட அவர்களின் உறவினர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

கைதிகளுக்கு காய்ச்சல் மற்றும் தோல் நோய் பரவி வருவதால் கடந்த சில நாள்களாக கைதிகளை பார்க்க உறவினர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது மீண்டும் பார்வையிடுவதற்கான வாய்ப்பை சிறைச்சாலைகள் திணைக்களம் வழங்கியுள்ளது. (ம-ரி2)

## கைக்குண்டுகள் வரணியில் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.29

கொடிகாமம், வரணி வடக்கில் நேற்று முன்தினம் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

அங்குள்ள தனியார் காணி ஒன்றைத் துப்புரவாக்கியபோது சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் இனங்காணப்பட்டதை அடுத்து அது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று 3 கைக்குண்டுகளை மீட்டனர். இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)




உலகை ஆளும் ஊடகத்துறைக்குள் நீங்களும் பிரவேசிக்க விருப்பமா?




பயிற்சிகள் யாவும் இலவசமாகவே நடத்தப்படும்

உதயன் ஊடகப் பயிற்சி - 2023

- உங்கள் ஒவ்வொருவரையும் பட்டைதீட்டி ஊடகத்துறையில் மிளிரச்செய்வதற்கு "உதயன்" தயாராகின்றான்.
- உதயனின் இந்தப் பயணத்துடன் கைகோர்க்க உங்களுக்கு விருப்பமா?
- அச்சு, இலத்திரனியல் ஊடகத்துறையின் அடிப்படைகள் மூத்த ஊடகர்கள், பல்கலை விரிவுரையாளர்களால் போதிக்கப்படும்.
- ஒரு மாத காலம் பயிற்சி மற்றும் ஊடகப்பணி தொடர்பான அனுபவங்களைப்பெற முடியும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும் மற்றும் பயிற்சி முடிவில் திறமையானவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
- 18 - 30 வயதுக்கு இடைப்பட்ட இரு பாலரும் விண்ணப்பிக்க முடியும்.
- பயிற்சிகள் யாவும் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் தலைமை அலுவலகத்தில் வார நாட்களில் நடைபெறும்.

உங்கள் சுயவிவரக் கோவையை 10.09.2023 இற்கு முன்னர் 0767374444 என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அல்லது digital@uthayan.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. மருத்துவமனை சர்ச்சை விசாரிக்கக் குழு அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக.29

வவுனியா பொது மருத்துவமனையில் பிரசவத்துக்காக சேர்க்கப்பட்ட பெண் ஒருவருடன் தாதியர்கள் நடந்துகொண்டவிதம் தொடர்பில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நால்வர் அடங்கிய விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 4ஆம் திகதி வவுனியா பொதுமருத்துவமனையில்குழந்தை ஒன்றைப் பிரசவித்த தாயுடன் விடுதிக்குப் பொறுப்பான தாதி மற்றும் விடுதியிலிருந்த பெரும்பான்மையின தாதிய உத்தியோகத்தர்கள் நடந்து கொண்டவிதம் தொடர்பில் சர்ச்சை எழுந்தது. குழந்தையின் தந்தைக்கும், பெரும்பான்மையினத் தாதி ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு வாக்குவாதமாக மாறியதை அடுத்து தாதியர் பழிவாங்கும் விதமாக நடந்துகொண்டனர் என்று கூறப்படுகின்றது.

விடுதிக்குப் பொறுப்பான தலைமைத்தாதி, உங்கள் கணவர் எம்முடன் வாக்குவாதம் செய்ததால் உங்கள் பிள்ளைக்கு தாதியர்கள் மருத்துவம் வழங்க மாட்டார்கள் என்று குழந்தையின் தாய்க்குத் தெரிவித்தார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்தச் சர்ச்சை தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்த நிலையில், இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக விசேட மருத்துவ நிபுணரை உள்ளடக்கிய நால்வர் கொண்ட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-27)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஒக. 29

உரும்பிராய் கிழக்கு அருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்பாள் சமேத சிவ மகேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ரி2)

## சுற்றுச் சூழல் செயற்றிட்டம்

சாவகச்சேரி, ஒக.29

கியூடெக் கரித்தாஸ் சுற்றுச் சூழல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி பிரதேச செயலகத்துடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் "கடற்கரை சுத்தப்படுத்தலும் மரநடுகையும்" இன்று செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு சாவகச்சேரி கோயிலாக்கண்டி கடற்கரைப் பகுதியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர். (ரி)


## மணமகன் தேவை

1994 இல் பிறந்த. இந்து கௌரவகுலத்தைச் சேர்ந்த (V). தனியார் (IT) நிறுவனத்தில் பணிபுரியும் 8இல் செவ்வாய் தோசம் அற்ற மணமகளுக்கு பொருந்தக் கூடிய படித்த உயர் பதவியில் உள்ள மணமகனை எதிர்பார்க்கின்றோம். (வடமராட்சி விரும்பத்தக்கது)

077 354 6176
074 382 0166

(CS51844) (AH-1)

## பெயர் மாற்றம்

காலையடி தெற்கு பண்டத்தரிப்பு யாழ்ப்பாணத்தில் வதியும் **கதிரேசு உதயரஞ்சன்** ஆகிய நான் எனது பெயரை **கதிரேசு உதயரஞ்சகுமார்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **கதிரேசு உதயரஞ்சகுமார்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

(CS 25658)M-1

கதிரேசு உதயரஞ்சகுமார்

## கடை வாடகைக்கு



கிளிநொச்சி. **A9** கண்டி வீதியில் பொது மருத்துவமனையில் இருந்து **400m** தூரத்தில் **45x16** அடி நீள அகலமுடைய இரண்டு கடைகள் (பிளட்) சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.

077 807 1049,
076 260 6498

(25657)AH-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 11 . 1933

மறைவு 26 . 08 . 2023



### திருமதி தங்கமலர் மயில்வாகனம்

யாழ் துன்னாலை தெற்கை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, சிட்னி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தங்கமலர் மயில்வாகனம் அவர்கள் சிட்னியில் சனிக்கிழமை 26-08-2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான முருகேசு, தெய்வானை தம்பதிகளின் மகளும் காலம்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சேதுப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், மயில்வாகனம் (இளைப்பாறிய இலங்கை போக்குவரத்து சபை வட மாகாண செயற்பாட்டு முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் டாக்டர் வதனி (சிட்னி), டாக்டர் மாலினி (சிட்னி), சுஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயப்பிரகாஷ், ராகவன், ரஜனி அவர்களின் அன்பு மாமியாரும் காலம்சென்ற செல்லம்மா, காலம்சென்ற தம்பிஜயா, காலம்சென்ற குலவீரசிங்கம், திலகவதி(UK) ஆகியோரின் அன்பு சகோதரியும் காலம்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, றோஸ்மலர், தெய்வநாயகி, ஜெயராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் டாக்டர் பிரஜித், அஞ்சலி, டாக்டர் மயூரி, பிரவீன், டாக்டர் அஷ்வின், உமேஷ், உதீஷா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆஷானின் பூட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

இறுதி அஞ்சலி, கிரியை பற்றிய விபரம்:

Time: From 10.00am to 12:45 pm on Sunday 3rd September 2023
Venue: Magnolia Chapel, Macquarie Park Cemetery and Crematorium, North Ryde
(Corner of Delhi Rd & Plassey Rd)

RIPbook
:https://ripbook.com/thangamalar-myilvaganam-64eb0baa84210/notice/obituary-64eb0e145b5ea

தொடர்புகளுக்கு
Dr. வதனி ஜெயப்பிரகாஸ் - +61419603446
Dr. மாலினி ராகவன் - +61414987101
சுயேந்திரன் - +447836613256


தகவல்:
S.Kulapalaselvam
(பெறாமகன்)
[illegible]

(CS 26112)M-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 12 . 1933

மறைவு 25 . 08 . 2023



### முருகேசு ஐயாத்துரை

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஐயாத்துரை அவர்கள் கடந்த (25.08.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு தெய்வானை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி நாகரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும், சத்தியசீலன், நந்தசீலன், ஜெயசீலன், தர்மசீலன், உதயசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாளினி, அஜந்தா, கார்த்திகாயினி, பிருந்தா, டுவீனி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாயினி, கிருத்திகா, பிரியன், மதுரா, பிரவின், ஹரி, ஹரிஷா, நவியா, நிவியா, லைஸ்ணன், இலக்ஸ்வரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, நல்லையா, கனகம்மா, நல்லம்மா, ராசதுரை, சின்னதுரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜேஸ்வரி- காலஞ்சென்ற தவராசா, சண்முகராஜா- குமுதினி, பற்குணராஜா- சூரியகுமாரி, மகேந்திரராஜா- சத்தியபாமா ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சிகா- சாந்த பாலன், சுஜீவா- அயந்தன், நிவேதா- ஜெனகன், சிந்து, கம்சி- ஒசான், ரோய்- நோறா, அலெக்ஸ், ரஜீவ்- சிவசுதா, சஜீவ் ஆகியோரின் அன்பு மாமனாரும், பெரிய தந்தையும், தக்ஷா, லக்சன், அருஷன், லீமா, றியோ ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2023) செவ்வாய்க்கிழமை 8.00AM - 11.00 AM Ajax Crematorium visitation Center 384, Finley Ave, Ajax on L1s 2E3 Canada இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மைத்துனி - த.இராஜேஸ்வரி 077 3089 338
மருமகன் - சாந்தபாலன்
பெறாமகள் -தர்சிகா
பேரப்பிள்ளைகள் -தக்ஷா, லக்ஷன்

(CS 26113)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமதி அறிவியல் அரங்கம்

அரியாலை, ஓக. 29

ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் ஸ்தாபகரும் மருத்துவக் கலாநிதியும் 'தூதன்' பத்திரிகை ஸ்தாபகருமான அமரர் முருகேசுவின் ஞாபகார்த்த நிகழ்வு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஸ்ரீகலைமகள் சனசமூக நிலைய விளையாட்டுக் குழுத் தலைவர் சுஜீவன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக மருத்துவர் ஜெயரட்ணம் டொனால் சுகந்தராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-ரி3)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 29

இருபாலைகிழக்கு, தேணிக் குளம்பதி அருள்மிகு லிங்க விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. எதிர் வரும் செப்ரெம்பர் 11 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ம-ரி2)

## குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இன்ரெரக்ட் கழகம் நடத்தும் குருதிக்கொடை முகாம் இன்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-இ)




## தேரேறி வந்தாள் தெல்லியூர் துர்க்கை அம்மன்





வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா பல்லாயிரம் மக்கள் புடைசூழ நேற்று பக்திபூர்வமாக இடம் பெற்றது. (ம-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதை வியாபாரத்தால் நாட்டினுள் பாதாளக் குழுக்களிடையே மோதல்

## தென்பகுதி சூடுகளுக்கும் இதுவே காரணமாம்

**கொழும்பு, ஓக. 29**
**தென்பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள துப்பாக்கிச்சூட்டுக் கொலைகள், பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவை என்றும் அவர்கள் போதைப்பொருள் வியாபாரம் காரணமாகப் பிரிந்து நின்று மோதுகின்றார்கள் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொலிஸ் திணைக்களம் தற்போது அரசியல் தலையீடற்ற நிறுவனமாக இயங்குகின்றது. நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது.
இந்நாட்டில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இனிமேலும் செயற்பட முடியாது. இந்நாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது பதிவு செய்யப்பட்டு வருகின்றன.
தற்போது பாதாள உலகக் குழுக்களுக்கு இடையில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதால், அவர்கள் தங்களுக்குள்ளேயே மோதிக்கொள்கின்றனர். போதைப்பொருள் தொடர்பாக இடம்பெறும் மோதல்களே இவ்வாறு அவர்கள் குழுக்களாகப் பிரிந்து தாக்குதல்களில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைகின்றது. பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் செய்ய எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான முழுமையான விசாரணை அறிக்கையை கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்கு கத்தோலிக்க திருச்சபையும் ஒத்துழைப்பு வழங்க முடியும்-என்றார். (அ-ஓ.26)

## நல்லூர் ஆலயச் சூழலில்

# சப்பாத்துடன் நடமாடிய படையினர் அகற்றப்பட்டனர்

*யாழ்ப்பாணம், ஓக. 29*
நல்லூர் ஆலயச் சுற்றாடலில் மோட்டார் வாகனத்தில் சப்பாத்துடன் நடமாடிய அதிரடிப் படையினர் அங்கிருந்து வெளியேறினர்.
ஆலயச் சுற்றாடலில் சப்பாத்துடன் அதிரடிப் படையினர் மோட்டார் வாகனத்தில் சென்றுள்ளனர். பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் அவர்களை அச்சுறுத்தும் வகையிலும் அதிரடிப் படையினரின் செயற்பாடுகள் இருந்ததாக யாழ். மாநகரசபை ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.
இதனையடுத்து மாநகர ஆணையாளர், அதிரடிப் படையினருக்கு ஆலயச் சூழலில் சப்பாத்துக்களுடன் நடமாடக்கூடாது என அறிவுறுத்தியுள்ளார். தமக்கு அவ்வாறு செயற்படக்கூடாது என்பது தெரியாது எனத் தெரிவித்த அவர்கள் அங்கிருந்து அகன்றனர். (ஒ-இ)




சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு கடந்த மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் மேற்படி ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் செயலாளரும், ஆசிரியருமான இரா.செல்வவடிவேல் மகாபாரதச் சொற்பொழிவு ஆற்றினார். தொடர்ந்து யாழ். துணவி அ.மி.த.க. பாடசாலை அதிபரின் கோரிக்கைக்கு அமைய மாணவர்களுக்கான 25ஆயிரம் ரூபா பெறுமதியான எழுதுபொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ய-66)



அவுஸ்திரேலியாவை தலைமையகமாகக் கொண்ட அகச்சுடர் அமைப்பின் ஏற்பாட்டில் க.பொ.த. உ/த பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத இளைஞர்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல் கருத்தரங்கு கடந்த மாதம் 23ஆம் திகதி கிளிநொச்சி [illegible] மருத்துவ அதிகாரி பணிமனையில் நடைபெற்றது. (ய-159)


# மரண அறிவித்தல்

நல்லூரம் பதியில்
26 . 08 . 1945



நல்லூரான் அடியில்
27 . 08 . 2023

## திரு. நாகலிங்கம் சண்முகநாதன் (ராசா)

யாழ்ப்பாணம் மணல்தறை லேன். கந்தர்மடத்தினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகலிங்கம் சண்முகநாதன் அவர்கள் 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை ஆவணி திங்கள் வளர்பிறை பத்தாம் பிறைநாளில் இறைபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்ற செல்லப்பா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் அருளானந்தம். இந்திராதேவி. கருணாநிதி. குகதாசன் (பாலா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சோதிமலர் அவர்களின் அன்புக் கணவரும் நிஷாந். உஷாந். வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சாம்பவி. டினுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆத்ரேயா. ஆஞ்ஜெய். ஸ்ரீ ருத்ர ஐயப்பா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் 30.08.2023 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 31.08.2023 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனத்திற்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இல 115. பலாலி வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**சோதிமலர் :** +94 77 9078 973
**நிஷாந், சாம்பவி :** +61 401961 332 , +94 76 2247 459
**உஷாந், டினுஷா :** +61 424 633 123, +61 421 642 771
**வைஷ்ணவி :** +94 77 2266 899

CS 26115 M-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆக்கிரமித்த...

குருந்தூர்மலைப்பகுதியில் விகாரை யின் எச்சங்கள் இருந்ததாகத் தெரி வித்து தொல்பொருள் திணைக்களம் அதனைச்சுற்றியுள்ள பொதுமக்களின் சுமார் 316 ஏக்கர் நிலத்தை அடையா ளக் கற்களை நட்டு ஆக்கிரமித்துள் ளது. குருந்தூர் மலைக்குச் சொந்தமா னது என்று 1933ஆம் ஆண்டு வர்த்த மானியில் வெளியிடப்பட்ட 78 ஏக்க ருக்கு மேலதிகமாகவே இவை ஆக்கிர மிக்கப்பட்டிருந்தன.

தம்மால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணி களை அளவீடு செய்து தருமாறு பிர தேச செயலகத்திடம் தொல்பொருள் திணைக்களம் கோரியிருந்தபோதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. தொல்பொருள் திணைக்களம் ஆக்கிர மித்துள்ள காணிகள் மக்களின் குடி மனை மற்றும் வாழ்வாதாரத்துக்குரிய இடங்கள் என தெரிவித்து அவற்றை விடுவிக்குமாறு மக்கள் போராடி வந்த னர்.

இந்த நிலையில் அந்தப் பகுதியை நேற்று அதிகாரிகள், அரசியல்வாதிகள் சென்று பார்வையிட்டனர். இதன்போது அவை குடிமனைகள் மற்றும் வயல்கள் எனத் தெரியவந்துள்ளது. இதனைய டுத்து அவற்றை விடுவிக்குமாறு தொல்பொருள் திணைக்கள அதிகாரிக ளிடம் கோரியபோது, இது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் தொல்பொ ருள் திணைக்களப் பணிப்பாளரிடமே உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அவரையும் அழைத்து அந்தப் பகு தியை ஆய்வு செய்து மக்கள் காணி களை விடுவிக்க முடிவு செய்யப்பட்டுள் ளது. (அ-ஒ.5)

### விகாரைக்கு...

புக் குழுக்கூட்டம் நடைபெறும்போது உள்ளே புகுந்து குழப்பம் விளைவித்த போதும் கிழக்கு ஆளுநர் தனது முடி வில் மாற்றம் எதுவுமில்லை என்று தெரிவித்துள்ளார்.

விகாரை அமைக்கப்படவிருந்த அரச காணியில் அத்துமீறி நுழைய முடியாது என பிரதேச செயலரால் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த கடிதம் மீளப் பெறப் பட்டு, பிக்குகள் அந்த காணிக்குள் நுழைவதில் எந்த ஆட்சேபணையும் இல்லையென புதிய கடிதம் வழங்கப்பட் டுள்ளது. ஆனால் கட்டுமானப் பணி களை மேற்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோண மலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு பிரதேசமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்த வரும் இவ்வாறானதொரு செயற்பாடு களை முன்னெடுப்பார்களானால் என்ன நடக்கும்? பிரதேச செயலாள ரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற் றாலும், பிரதேசசபையின் அனுமதி யின்றி எந்த ஒரு கட்டுமானப்பணி களையும் முன்னெடுக்க முடியாது- என் றார். (அ-ஒ-இ)

### இரணைமடுவில்...

ளது. வறட்சி காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயத்துக் கும், நன்னீர் மீன்பிடிக்கும் பாதிப்பு ஏற்பட் டுள்ளது. (அ-ஒ-113)

### துர்க்கை....

விழா நேற்றுத் திங்கட்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. சித்திரத் தேர்ப் பவனியை முன்னிட்டு துர்க்கை அம்பா ளின் சித்திரத் தேர் இருப்பிடம் சென்ற டைந்து சுமார் இரண்டு மணித்தியாலத் தின் பின்னர் கட்டுவனைச் சேர்ந்த 33 வயதான மகாலிங்கம் சபேசன் என்ற இளம் குடும்பத்தலைவர் துர்க்கை அம் பாள் போன்று வேடமணிந்து கட்டுவன் ஐயப்பன் ஆலயத்திலிருந்து பறவைக் காவடி எடுத்துச் சென்றார்.

துர்க்கை அம்பாள் வடிவில் சென்ற காட்சி வீதியால் சென்றவர்களினதும், ஆலயத் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டிருந்த அடியவர்களினதும் கவ னத்தை வெகுவாக ஈர்த்தமையை அவ தானிக்க முடிந்தது.

மேற்படி இளம் குடும்பத்தலைவர் அதி கமாக நேசிக்கும் தனது மனைவியைப் பீடித்துள்ள கடுமையான நோய் தீர வேண்டியே தேர்த் திருவிழாவான நேற் றையதினம் துர்க்கை அம்பாள் வடிவில் பறவைக்காவடி எடுத்துத் தனது நேர்த் தியை நிறைவு செய்துள்ளார். நோயால் பீடிக்கப்பட்ட அவரது மனைவியும் நீண் டதூரம் நடந்து அவருடன் கூட வந்திருந் தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆலயத் தேர் திருவிழா வும் நேற்றுப் பெரும் பக்திபூர்வமாக பெருமளவு அடியாளர்களுடன் நடந் தேறியது.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி இடம்பெற்றதைத்தொடர்ந்து துர்க்கை அம்பாள் அலங்கார நாயகி யாக அழகிய பீடத்தில் உள்வீதியில் மெல்ல மெல்லத் திருநடனத்துடன் அசைந்தாடி வந்து காலை 9 மணிய ளவில் சித்திரத் தேரில் எழுந்தருளி னாள்.

சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டு, விசேட தீபாராதனை இடம்பெற்றதைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்க காலை 9.30 மணிய ளவில் சித்திரத் தேர்ப் பவனி ஆரம்பமா னது. ஆண் அடியவர்களும், பெண் அடியவர்களும் இணைந்து சித்திரத் தேரின் வடம் தொட்டிழுத்தனர்.

சித்திரத் தேர் வீதி உலா வந்த போது நூற்றுக்கணக்கான ஆண் அடியவர் கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், பல மாதர்கள் அடியளித்தும், நூற்றுக்கும் மேற்பட்ட ஆண் அடியவர்கள் பறவைக் காவடிகள், தூக்குக் காவடிகள், சப்பா ணிக் காவடி, செதில் காவடிகள் முத லான வகை வகையான காவடிகள் எடுத்தும், மங்கையர்கள் பலரும் கற்பூ ரச் சட்டிகள் ஏந்தியும், பாற்காவடிகள் எடுத்தும் துர்க்கை அம்பாளைத் துதி செய்தனர். (ஒ-66)

(மேலும் படங்கள் பக்:9)

### 8 வயதுச் சிறுவன்...

வன் வவுனியாப் பொலிஸாரால் நேற் றுக் கைது செய்யப்பட்டுள்ளான்.

பாடசாலை முடிவடைந்து மேலதிக வகுப்புக்காகச் சென்ற 8 வயதுச் சிறு வனை அந்தப் பகுதியில் உள்ள வீட்டில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை 15 வயது சிறுவன் துஷ்பிரயோகம் செய் துள்ளதாக குற்றம் சுமத்தப்படுகின் றது.

8 வயதுச் சிறுவன் வீடு சென்ற பின் தனக்கு நடந்த சம்பவத்தை வீட்டாருக் குத் தெரியப்படுத்தியதையடுத்து, அவன் சிகிச்சைக்காக வவுனியா மருத் துவமனையில் இரவு சேர்க்கப்பட்டுள் ளார். இது தொடர்பில் மருத்துவமனைப் பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப் பாட்டையடுத்து 15 வயதுச் சிறுவன் வவுனியாப் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளான். (அ-ஒ.18)

### மாம்பழம்...

பழம் ஒன்று ஒரு இலட்சத்து எழுபதாயி ரம் ரூபாவுக்கு ஏலத்தில் பெறப்பட்டுள் ளது. ஆலயத்தின் மாம்பழத் திருவிழா அன்று பிள்ளையாரின் திருவடிகளில் வைக்கப்பட்ட மாம்பழமே இவ்வாறு கார்த்திகேசு சிவகுமார் குடும்பத்தினரால் ஏலத்தில் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை- வவுனியாவில் ஒரு இலட் சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு மாம்பழம் ஏலத்தில் பெறப்பட்டிருந்தமையும் குறிப் பிடத்தக்கது. (அ-ஒ-125)

### யாழ்....

மடக்கி பிடித்துள்ளது. கொள்ளையடிக்கப் பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

வீடுகளுக்குள் கூரையைப் பிரித்து இறங்கி, வீட்டில் உள்ளவர்களை அச்சுறுத்தி கத்தி காட்டி நகைகளைக் கொள்ளை அடித்து செல்லும் சம்பவங்கள் கடந்த வாரங்களில் பரவலாக இடம்பெற்றிருந்தன. இது தொடர் பில் 5 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டி ருந்தன.

யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின வழிகாட்டு தலின் கீழ், யாழ்ப்பாண மாவட்ட குற்றத்த டுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலை மையிலான அணியினரால் குறித்த திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நல்லூர் பின் வீதியைச்சேர்ந்த 4 சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சங்கி லியன் வீதியில் கொள்ளையடிக்கப்பட்ட 24 பவுண் நகைகளும், இணுவிலில் கொள் ளையிடப்பட்ட 4 பவுண் நகைகளும், கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட் டார் சைக்கிள், வாள், நான்கு கையடக்க தொலைபேசிகளும் பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது நல்லூர் பின் வீதியால் செல்லும் வயோதி பர்களை மிரட்டி கைத்தொலைபேசி, சிறிய தொகை பணம் என்பவற்றைக் கொள்ளை யடிக்கும் சம்பவங்களிலும் ஈடுபட்டுள் ளமை தெரியவந்துள்ளது. அதேவேளை இவர்களுக்கு எதிராக 12 வழக்குள் நிலுவை யில் உள்ளன.

மேலும் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் ஆலோசனைக்கமைய யாழ்ப்பாண மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்தவின் தலைமையின் கீழ் இயங் கும் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜெரோல் வழங் கிய ஆலோசனைக்கமைய, யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதி காரி பொலிஸ்பரிசோதகர் தெ.மேனன் மற்றும் உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப்பின் கீழ் கவியரசன் ஜெயந்தன், கரன், சுஜந் தன், ஜோசப், சம்பத் அறுகம், பெண் கொன்ஸ்டபிள் இரந்திகா ஆகியோர் அடங் கிய பொலிஸ் அணியினர் இவர்களைக் கைது செய்துள்ளனர். (அ-ஒ-20.26.27)

### பல்கலை...

ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கத்தியை வைத்து அச்சுறுத்தல் விடுக்கப் பட்டதாக கிடைத்த தகவலுக்கு அமைய சம் பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவ ரைக் கைது செய்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (அ-ஒ-125)

### நல்லூரில்...

விடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ். மாவட்ட பிரதி பணிப்பாளர் சுபோகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 20 மைக்ரோன் தடிப்புக்கு குறைந்த பொலித்தீன் பாவனைக்கு தடை செய் யப்பட்டுள்ளது. பொலித்தீனால் உரு வாக்கப்பட்ட லஞ்ச் சீற் நூறு விகிதம் உக்கக்கூடியதாக இருக்கவேண்டும். இது குறித்த விழிப்புணர்வுகள் மேற் கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தாதவர் கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் இதுவ ரையான காலப்பகுதியில் 14 கடை உரி மையாளர்கள் தடைசெய்யப்பட்ட பொலித்தீன் பாவனைக் குற்றச்சாட்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நீதிமன்ற வழக்குகளை எதிர்கொள்கின் றனர் - என்றார்.

இதேவேளை, நல்லூர் ஆலயச் சூழ லில் பக்தர்கள் பொலித்தீன் பைகளை எடுத்துவர தடைவிதிக்கப்பட்டுள்ள தோடு பக்தர்களுக்கு விழிப்புணர்வூட்டி மத்திய சுற்றாடல் அதிகார சபையால் துணிப்பைகளும் வழங்கப்பட்டுவரு கின்றன. பாடசாலைகளின் சுற்றாடல் முன்னோடிக்குழு மாணவர்கள், ஆசிரி யர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபை யின் அதிகாரிகள், பிரதிப் பணிப்பாளர் இணைந்து ஆலயத்துக்கு பூசைப்பொருள் கள் மற்றும் பிற பொருள்களை பொலித் தீன் பைகளை எடுத்து வருவோருக்கு முறையான விழிப்புணர்வை ஏற்படுத்தி, குறித்த பொலித்தீன் பைகள் வாங்கப் பட்டு அதற்கு மாற்றீடாக துணிப்பைகள் வழங்கப்படுகின்றன. (அ-ஒ.125)

### கொக்குத்தொடுவாய்...

னெடுத்துச் செல்வதற்கு நிதி விடுவிக்கப்பட் டுள்ளது. அந்தப் பணம் எமக்கு கிடைத்தவுடன் அகழ்வுப் பணிகளை முன் னெடுப்பவர்களுக்கு வழங்கப்படும். இந் தப் பணிகள் சட்டமருத்துவ அதிகாரிகள் தலைமையில் முன்னெடுக்கப்படும்' என் றார். அகழ்வு பணிகள் குறித்து நாளைம றுதினம் 31ஆம் திகதி முல்லைத்தீவு நீதி மன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் நிதி விடு விப்பு தொடர்பில் அங்கு சுட்டிகாட் டப்பட்ட பின்னர் அகழ்வு குறித்த நீதிமன்ற கட்ட ளைகள் பிறப்பிக்கப்படலாம் என தெரியவ ருகின்றது. (அ-ஒ-125)

### அங்கப்பிரதட்சணம்...

உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த செல்லையா சிறீஸ்குமார் (வயது - 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் ஒவ்வொரு ஆண்டும் செல்வச்சந்நிதி பெருந்திருவிழாக் காலங்களில் அங்கப்பி ரதட்சணம் செய்பவர். வழமைபோன்று நேற்றும் அங்கப்பிரதட்சணம் செய்துள் ளார். அங்கப்பிரதட்சணம் முடித்து தேங் காய் உடைத்தபோது அவர் மயங்கி வீழ்ந் துள்ளார். பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் அவர் உடனடியாகச் சேர்க்கப் பட்டுள்ளார். அங்கு உயிரிழந்து விட்டா ரென தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை வல்வெட்டித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவராஜா மேற்கொண்டார். (அ-ஒ-20.26.100)

### முந்த...

மடைந்த இளம் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு தேவிபுரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான சுசீபன் வசந்தமலர் (வயது -28) என்பவரே உயி ரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த 25ஆம் திகதி மோட் டார் சைக்கிளில் பின்னால் இருந்து பய ணித்துள்ளார். வீதியின் மத்தியபகுதிக்கு அண்மையில் , முன்னால் பயணித்த முச்சக்கரவண்டியை முந்திச் செல்ல முயற் சித்தபோது, அந்த முச்சக்கரவண்டியுடன் மோட்டார் சைக்கிளின் இடதுபக்கம் மோதி யது. இதனால் வீதியில் வீழ்ந்து காயம டைந்த குறித்த பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள் ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26.27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீயை வளர்க்கும் 123 பேருக்கு உபகரணங்கள் கையளிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ். மாவட்டத்தில் 123 பயிற்றுவிக்கப்பட்ட பயனாளிகளுக்கு தேனீ வளர்ப்பு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன என்று யாழ் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை முறையாக பயிற்றுவிக்கப்பட்ட 123 பயனாளிகளுக்கு தேனீ பெட்டி, தேனீ, தொப்பி, புகையூட்டி என்பன வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்துக்காக 1.27 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதலால், தேனீ வளர்ப்புத் தொடர்பில் ஆர்வமுள்ளவர்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள விவசாய பிரிவைத் தொடர்புகொள்ளமுடியும் - என்றார். (ம-125)

# தையிட்டி விகாரை; இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 29

தையிட்டி சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்துக்கு எதிராக இன்று மீண்டும் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது.

தையிட்டி சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை அகற்ற வலியுறுத்தியும், பொதுமக்களின் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறு வலியுறுத்தியும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் தையிட்டிதிஸ்ஸ விகாரைக்கு அண்மையில் மீண்டும் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது. பூரணை தினமான நாளை புதன்கிழமை இரவு 7 மணி வரை மேற்படி கவன வீர்ப்புப் போராட்டம் இடம்பெறும்.

இந்தப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செல்வராசா கஜேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-ஓ,27,66)


## வேலையாட்கள் தேவை

தெல்லிப்பளையில் இயங்கி வரும் Hotel ஒன்றுக்கு அனைத்து உணவுகளையும் தயாரிக்கக் கூடிய சமையலாளர் தேவை.
(நாள் ஒன்றுக்கு 2500/-, மூன்று நேர உணவும், தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்)

(CS/51843)AH-1

077 979 0899

பழைய பிரதேச செயலக ஒழுங்கை, தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை.


# 4 வீதமானவர்களுக்கு நினைவிழப்பு நோய்!

## மனநல மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 29

இலங்கையின் சனத்தொகையில் 4 வீதமானவர்கள் நினைவு இழப்பு எனப்படும் டிமென்ஷியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மனநல மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மனநல மருத்துவ நிபுணர் என்.குமாநாயக்க தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்போது 4 வீதமான மக்கள் நினைவிழப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். வயோதிபத்துடன் மூளை செல்கள் அழிவதால் இந்த நிலைமை ஏற்படுகிறது.

முறையான உணவுப் பழக்கவழக்கங்களை கடை பிடிப்பதன் மூலமும், தொடர்ந்து உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமும், நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதன் மூல மும் இந்த நிலைமையைக் குறைக்க முடியும் - என்றார். (ம-ரி3)


## தேவை

மில் வேலைக்கு ஆள் தேவை.

(CS/51837)AH-1

077 610 6643

## தோட்டக் காணி விற்பனைக்கு

புத்தூர் நவற்கிரி வீதியில் நவற்கிரியில் 46 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

077 706 6487

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **33 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு. கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.

நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.

செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.

3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன். **நிலப்பரப்பு பார்வையிடும் நேரம் :-**

காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு:- குரு 076 755 8606, 077 8743 204, 077 2880 152.**


# பணமோசடியில் கைதானவரை விடுவித்தது வவுனியா பொலிஸ்

## மக்கள் நேற்றுப் போராட்டம்



வவுனியா, ஓக. 29

இந்தியாவுக்கு சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி பணமோசடி செய்தவரை மக்கள் பிடித்துக் கொடுத்தும் கூட , அவரை வவுனியா பொலிஸார் விடுவித்துள்ளனரென தெரிவித்து வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் முன்பாக பாதிக்கப்பட்டவர்களால் நேற்று மதியம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கண்டியைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவுக்கு பௌத்தர்களை யாத்திரையாக அழைத்துச் செல்வதாக தெரிவித்து, வவுனியா மற்றும் மதவாச்சி பகுதிகளில் 20 க்கும் மேற்பட்டவர்களிடம் பணம் பெற்றுள்ளார். ஒவ்வொருவரிடமும், ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம் மற்றும் அவர்களது கடவுச்சீட்டு, அடையாள அட்டை போட்டோப் பிரதி உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்றவர் பின்னர் யாத்திரைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

மக்களிடம் பணம் பெற்ற பின் மக்களுடன் தொடர்பில்லாது நடமாடியுள்ளார். யாத்திரைக்கென பணம் கொடுத்தோர், அவரது நடவடிக்கையில் சந்தேகம் அடைந்து, மதவாச்சிப் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் அவருக்கு எதிராக முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தனர். எனினும் சம்பந்தப்பட்டவர் பொலிஸ் நிலையம் செல்லாது தலைமைறைவாக இருந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 18ஆம் திகதி குறித்த நபர் வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்களம் முன்பாக நிற்பதாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தெரியவந்ததையடுத்து அங்கு சென்ற பாதிக்கப்பட்டோர் அவரைப் பிடித்து வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர். எனினும் அவர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் பொலிஸார் விடுவித்துள்ள னர்.

இதனால் பாதிக்கப்பட்டோர் , வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலத்தில் முறைப்பாடு ஒன்றை நேற்றுப் பதிவு செய்ததுடன், வவுனியா பொலிஸார் குற்றவாளியை விடுவித்தாகத் தெரிவித்து பொலிஸ் மா அதிபர் காரியாலயம் முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். (அ-ஓ-18,27)

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் துரைசிங்கம் (கோபால்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குத்தொடுவாயை வசிப்பிடமாகவும், தற்போது 2ம் வட்டாரம், கோம்பாவில் புதுக்குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் துரைசிங்கம் (கோபால்) நேற்றுமுன்தினம் (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும், இராசம்மாவின் பாசமிகு கணவரும், றஜனி (வவுனியா), ராகவன் (லண்டன்), கண்ணதாசன் (கண்ணன் - லண்டன்), கசீதன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் அகிலன் (லண்டன்), நஜீரதன் (அமெரிக்கா) ஆகியோரின் தந்தையும், குணம் (வவுனியா), சோபனா (லண்டன்), சொர்ணலட்சுமி (லண்டன்), சியாமளா (யாழ்ப்பாணம்), செல்வராஜினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், றோஜி, அனோஜன் (பிரான்ஸ்), றெபேட்ஷன், பியாணா (லண்டன்), வினோஜி, அஜிந்தன் (கொழும்பு), ரிசி, நிலா (லண்டன்), மது, கனிஸ்ரன் (லண்டன்), டினுஜன், ரிதுஷன் (யாழ்ப்பாணம்), நிருத்தன், கபினா (லண்டன்) ஆகியோரின் பேரனும், அற்றினா, கிளாரா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் சரஸ்வதி (கனடா), சாரதாதேவி (மீசாலை), கண்மணி (பொத்துவில்), கணேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் சகோதரனும், இராஜரட்ணம் (கொழும்பு), பத்மநாதன் (வதிரி), காலஞ்சென்ற கந்தையா (மல்லாவி), ஜெகதீஸ்வரி (கனடா), ஸ்ரீறஞ்சினி (விசுவமடு), பவானி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

077 205 5526, 077 126 4233



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org